

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்ரி

J. சரவண
என்.ஜி.எம். கல்லூரி.
பொள்ளாச்சி

தமிழ்த்துறை

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் ‘A’ தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

# உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா. ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபுபூ | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 96 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# சங்ககாலக் குடும்பம்

**ச.கவிதா,**
ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

**முன்னுரை**

மனிதன் சமூக வயப்பட்டவன். சமூகமே மனித வாழ்வின் அடிப்படையாகும், தனித்துவமாகும். சமூகத்தின் மிக முக்கியமான நிறுவனங்களில் ஒன்றாகக் குடும்பம் விளங்குகிறது. குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. குடும்பம் தொடங்கிக் குலம் கூட்டம் பெருங்குழு, கிளைச்சாதி, சாதி, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவு பெறுகிறது. ஆதலின் குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. குடும்பம் எனும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே சங்க இலக்கியத்தில் 'குடம்பை', 'குடும்பு', 'கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை. சங்ககாலக் குடும்பத்தை பற்றி ஆராய்வதே அக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குடும்பங்களின் வாழிடங்கள்**

மனிதகுல வரலாற்றில் குடும்பத்தின் தோற்றம், வளர்ச்சி இரண்டையும் ஆராயும்போது குடும்பம் எனும் அமைப்பு உருவாகி செயல்பட்ட இடம் வாழிடம் எவ்வாறு இருந்தது என்பது மானிடவியலில் முக்கியமான கூறாக ஆராயப்பெறும். பண்டைத் தமிழர்களின் குடும்பம் எவ்வகையான இடங்களில் தொழுறப்பட்டது என்பதை இங்கு கவனத்தில் கொள்வோம். பண்டைத் தமிழர்கள் குடும்பம் எனும் அமைப்புடன் வாழ்ந்த இடங்கள் பற்றிப் பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

> **இரவுக் குறியே இல்லகத் துள்ளும்**
> **மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே**
> **மனையகம் புகாக் காலை யான**
>
> **-(தொல். பொருள். 129)**

எனும் தொல்காப்பிய நூற்பா, 'இல்' மனை ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியத்தில் மேலும் பல சொற்கள் உள்ளன. இல், மனை, குரம்பை, புலப்பில், மூன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம்,

நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடத்தில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன. இந்த இடப்பெயர்கள் குடும்ப அமைப்புகளின் வாயிலாகக் காணப்பட்ட புவியியல் சமூக வேறுபாடுகளை உணர்த்துவனவாக உள்ளன. இவற்றில் மூன்றில் எனும் சொல் பல இடங்களில் பயின்று வருவதைக் காணமுடிகிறது. எளிய வாழ்விடமாக இது இருந்ததைக் காணமுடிகிறது. மூன்றில் என்பதற்கு முற்றம் வீட்டின் முன்னுள்ள இடம் எனும் பொருள்களும் உள்ளன.

| | |
|---|---|
| **வேங்கை மூன்றில்** | (புறம். 129) |
| **வீயுக விரிந்த மூன்றில்** | (நற். 232) |
| **புலவு மணல் மூன்றில்** | (நற். 239) |
| **குறவர் மூன்றில்** | (அகம். 78) |
| **சிறுகுடி மூன்றில்** | (குறுந். 228) |
| **சீறில் மூன்றில்** | (புறம். 325) |

ஆகிய அடிகள் வாழ்விடத்தின் பல்வேறு இயல்புகளையும், தன்மைகளையும் உணர்த்துகின்றன. இல், மனை எனும் எளிய வாழ்விடத்திலிருந்து 'விண்தோய் மாடம்' வரை வாழ்விடங்கள் செல்வ நிலைக்கேற்பவும், உடைமை நிலைக்கேற்பவும் வெவ்வேறு வகையில் இருந்துள்ளன.

மூன்றில் குரம்பை (குறுந். 134:5, 144:7) குழல் முதலிய இடங்களில் வாழ்ந்த குடும்பத்தார் வறியவர்களாகவே இருந்துள்ளதை அறிய முடிகிறது. புலப்பில் (குறுந்.41:5) என்பது தனி வீடாகும். சிறுகுடி (நற் 82,87,110, குறுந் 284,322,355 பெரும் 197) எனும் சொல் வேளாண் தொழிலாளர்களின் குடியிருந்துப்பு எனக் கார்த்திகேசு சிவத்தம்பி (2003:109) கூறுகிறார். செழுந்தண்மனை, வளமனை, கடிமனை, திருமனை, நன்மனை போன்ற இடங்களில் வாழ்ந்தவர்கள் செல்வச் செழிப்புடன் இருந்துள்ளனர்.

| | |
|---|---|
| **கடிமனை மாடம்** | (அகம். 255) |
| **உயர் மாடம்** | (பட்டின. 115) |
| **கொழுங்கால் மாடம்** | (பட்டின. 261) |
| **வேயா மாடம்** | (பெரும்பாண். 348) |
| **விண்தோய் மாடம்** | (பெரும்பாண். 369) |

முதலிய இடங்களில் வாழ்ந்த குடும்பத்தார் பெருஞ்செல்வம் படைத்தவர்களாய் இருந்துள்ளதையும் அறிய முடிகிறது. அவ்வாறே பெரும் செல்வக் குடும்பத்தார் வாழுமிடங்கள் 'நகர்' என்றும் குறிக்கப் பெறுகின்றன. குடியிருப்பைக் குறிக்கும் 'நகர்' எனும் சொல் சங்க இலக்கியங்களில் 30 இடங்களில் பயின்று வருகிறது. (ஆறுமுகம் 2008 30) தொல்காப்பியத்தைக் காட்டிலும் சங்க இலக்கியங்களே அக்காலச்

சமூகத்தின் எல்லா வகையான உயர்வு, தாழ்வுகளையும் சுட்டிக்காட்டுகின்றன.

**மணந்தகம்**

இனி குடும்பத்தின் அமைப்புச் சார்ந்த வடிவங்களும் அவற்றின் செயல்பாடுகளும் விளக்கப்படுகின்றன. குடும்பம் அதன் தொடர்ச்சியான சுழற்சி வட்டத்தில் பல கட்டங்களைக் கடந்து செல்கிறது. குடும்பமும் உயிரிகளைப் போன்றே தோன்றுகிறது. வளர்கிறது. பல கட்டங்களைக் கடக்கிறது. இறுதியில் மறைந்து விடுகிறது. அதன் வாழ்க்கைச் சுழற்சியில் பல வடிவங்களில் நிலைமாற்றம் பெறுகிறது. இத்தகைய நீண்ட பாதையில் குடும்பத்தின் தொடக்கம் திருமணமே. மணப்புரிந்த கணவனும், மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே மணந்தகம் எனப்படுகிறது. முதல் குழந்தை பிறக்கும் வரையுள்ள கால கட்டத்தை இந்நிலை குறிக்கிறது. தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது. தலைவன், தலைவி இருவர் மட்டும் உண்டு மகிழ்ந்து தாம்பத்திய வாழ்வில் இன்புறும் மணவாழ்விற்குரிய இத்தொடக்க நிலையைத் தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகிறது.

> **ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது**
> **வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென**
> **அடிசிலும் பூவும் தொடுத்தற் கண்ணும்**
> **- (தொல். பொருள். 144)**

மணமான தம்பதியினர் மணந்தகத்தில் குடும்ப வாழ்வைத் தொடங்கும் கால கட்டத்தில் செவிலி அவர்களுக்கு நல்லவை உரைக்கிறாள். அல்லவை கடிகிறாள். இளந்தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்குரியது என்று கூறும் தொல்காப்பிய வரிகள் மூலம் மணந்தகம் எனும் குடும்ப அமைப்பு முக்கியத்துவம் பெற்றிருந்ததை அறிய முடிகிறது. (தொல். பொருள். 151) இக்கால கட்டத்தில் அறிவர் பங்கும் செவிலித்தாயைப் போன்றே இருந்துள்ளது. நெறி பிறழுங்கால் இடித்து நிறுத்த வேண்டியது அறிவர் கடமையாக இருந்ததையும் தொல்காப்பியம் காட்டுகிறது. (தொல். பொருள். 153).

**தாய்வழிக் குடும்பம்**

ஒவ்வொரு சமூகத்திலும் அதன் அடிப்படை அமைப்பானது நான்கு முக்கிய கூறுகளால் உருவாக்கப்படுகின்றது. அவை

1. சமூகத்தின் குடிவழி முறை
2. மணமக்கள் வாழும் உறைவிடமுறை
3. குடும்பத்தின் தலைமை முறையும் நிர்வாகப் பொறுப்பும்
4. சொத்துரிமை முறை

**1. குடிவழி முறை**

ஆதியில் குடும்பங்கள் தாய்வழியில் தம் வம்சாவளியைக் கொண்டிருந்தன. இன்று தமிழர்களிடம் இம்முறை மிகவும் அருகி உள்ளது. அக்குடும்ப உறுப்பினர்கள் தாய்க்கால் வழியில் வருபவர்களாக இருப்பார்கள். குடிமரபும், வம்சாவழியும் பெண்வழியில் பேணப்படும். தத்தம் தாய்க்கால் வழியை முன்வைத்தே திருமணத்தின் நடைமுறைகளை ஒழுங்கமைப்பார்கள். மணமக்கள் இருவரும் வெவ்வேறு தாய்வழிக் கணப்பிரிவைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் எனும் புறமணக் கட்டுப்பாட்டைக் கண்டிப்பாகப் பின்பற்றுவார்கள்.

**2. உறைவிடம்**

தாய்வழிச் சமூகமாயின் திருமணத்திற்குப் பின் மணமக்கள் தாயகத்தில் குடும்பம் நடத்துவார்கள். திருமணத்திற்குப் பின்பும் பெண் தன்னுடைய பிறந்தகத்திலேயே இருப்பாள். கணவன் மனைவியகத்திற்கு வந்து செல்பவராக இருப்பார். உலாக அளவில் பார்க்கும்போது சில தாய்வழிச் சமூகங்களில் பிள்ளைகள் தாய்மாமன் அகத்தில் வளரும் நிலை கூட காணப்படுகிறது. சங்க இலக்கியத்தில் இதற்கான சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

**3. குடும்பத்தலைமை**

தாய்வழிச் சமூகத்தில் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பும் நிர்வாகமும் மூத்த பெண்ணிடம் இருக்கும். தாயாட்சி முறை இருப்பதால் பெண்களே அதிகாரம் செறுப்பவர்களாகவும், நிர்வாகம் செய்பவர்களாகவும் இருப்பார்கள்.

**4. சொத்துரிமை**

மருமக்கள் தாயக் குடும்பங்களில் சொத்தும் பிற குடும்ப உடைமைகளும் பெண்வழியில் மட்டுமே செல்லும். பெண்வழிச் சொத்துரிமை பெண்களுக்கான முக்கியத்துவத்தை நிலைநாட்டும் ஒரு கூறாக அமைகிறது.

**தந்தைவழிக் குடும்பம்**

மனித குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய்வழிக் கண சமூக முறையானது தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழி அறிய முடிந்தாலும், சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக வேர் ஊன்றி மிகப் பரவலாகப் பரவி விட்டதையும் காண முடிகிறது. ஆண் மையச் சமூக அமைப்பில் ஆணின் முக்கியத்துவமே முழுமை பெற்றுவிட்டது. சமூகத்தின் வம்சாவளி முறை, உறைவிட முறை, நிர்வாக முறை, சொத்துரிமை முறை உள்ளிட்ட சமூகத்தின் பிற தளங்களிலும் ஆண் மையம் முன்னிலை பெற்றுவிட்டது. தொல்காப்பியம் தொடங்கி, சங்க இலக்கியம் முழுவதும் இதனைக் காணமுடிகிறது.

சங்க காலத்தில் ஒரு கட்டத்தில் பெண்ணின் திருமணத்தை முடிவு செய்யும் அதிகாரம் தந்தையிடம் வந்து சேர்ந்தது. மேலும், அவரை முறைப்படி வணங்காதவர்க்குத் "தன்தக வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்" (புறம். 338) என்கிறது ஒரு புறப்பாடல். சமூகத்தில் குடும்பத் தலைவருக்குரிய மரியாதையையும், அதிகாரத்தையும் காட்டும் இப்பாடல் அடி, தந்தைவழிக் குடும்பமுறை மெல்ல மெல்ல வறுப்பட்டு விட்டதைக் காட்டுகிறது.

தலைவியின் தந்தையைப் பணிந்தும், ஏவல் கேட்டும், கடல்மேல் வினை மேற்கொண்டு பொருள் சம்பாதித்தும், அவருக்குத் தகுவன செய்தும் தலைவியைத் தருவாரோ என்கிற பின்வரும் தலைவன் கூற்றுப் பாடல் தந்தைவழிச் சமூகத்தின் உன்னத நிலையை உணர்த்துகிறது.

**இருநீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழுதும்**
**பெருநீர்க் கோட்டம் புணையொடு புக்கும்**
**படுத்தனம் பணிந்தமை அடுத்தனம் இருப்பின்**
**தருவன் கொல்லோ**

**(அகம். 280)**

ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனுடைய தந்தையகத்தில் வாழ வேண்டும். முணமான பின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்த போது அவனுடைய தாய் அவளுக்குச் சிலம்புகழி நோன்பு செய்திருக்கிறாள்.

**நும்மனைச் சிலம்பு கழ்இ யயரினும்**
**எம்மனை வதுவை நல்மணம் கழுக**

**(ஐங். 399 1-2)**

எனும் ஐங்குறுநூற்றில் வரும் பாடல்வழி திருமணத்திற்குப் பின் மணமக்களின் வாழ்விடம் கணவனகம் என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. கணவனகத்தில் வாழாத் தலைப்படும் பெண் புகந்த வீட்டிற்கு உரிமையுடையவளாக மாறிவிடுவதால் அக்குடும்பத்தின் வாழ்வியல் முறைகளைப் பின்பற்றுபவளாகவே மாறிவிடுகிறாள். மேலும், **'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே'** (குறுந்.135) என்னும் குறுந்தொகைப் பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறியமுடிகிறது. சங்க காலத்தில் தந்தை வழிக் குடும்ப முறை மிகவும் வலுவான ஒரு பரவலான முறையாக இருந்துள்ளதைப் பொருள்வயிற் பிரிவு, போர் வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் எனப் பல்வேறு சமூகக் களங்களில் காண முடிகிறது.

**முடிவுரை**

சங்க கால குடும்பத்தின் வாழிடங்களும் அதன் அமைப்பு முறைகளும் வாழிடங்களின் வளர்ச்சி நிலையினையும் வாழிடங்களின் இயல்புகளையும், தன்மைகளையும், தாய்வழி குடும்பத்தின் அமைப்பினையும், தந்தை வழி குடும்பத்தின் அமைப்பினையும் சிறப்பாக இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

❖




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்